| 123-02-15-08-2202 | நகர்ப்புற மேம்பாட்டு கட்டுமான மற்றும் வீட்டுவசதி அமைச்சு | மூலதனச் செலவீனம | 464,622,101.94 | 436,605,470.54 | 28,016,631.40 | 94 |
| 123-02-15-08-2509 | ம்பாட்டு கட்டுமான | | 86,015,896.83 | 85,408,401.13 | 607,495.70 | 99 |
| மொத்தம் | | | **550,637,998.77** | **522,013,871.67** | **28,624,127.10** | |
| 124-02-03-00-1001 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 3,025,217.00 | 2,692,951.00 | 332,266.00 | 89 |
| 124-02-03-00-1003 | | | 1,373,100.00 | 1,243,000.00 | 130,100.00 | 91 |
| 124-02-03-00-1101 | | | 72,000.00 | 68,640.00 | 3,360.00 | 95 |
| 124-02-03-00-1201 | | | 7,200.00 | 7200.00 | - | 100 |
| 124-02-05-01-2202 | | மூலதனச் செலவீனம | 9,772,400.00 | 9,683,519.62 | 88,880.38 | 99 |
| 124-02-03-07-2509 | | | 160,000.00 | 160,000.00 | - | 100 |
| 124-02-03-14-2509 | | | 158,000.00 | 153,000.00 | 5,000.00 | 97 |
| மொத்தம் | | | **14,567,917.00** | **14,008,310.62** | **559,606.38** | |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 126-01-18-00-1101 | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 345,600.00 | 252,119.78 | 93,480.22 | 73 |
| 126-01-18-00-1201 | | | 52,000.00 | 46,998.68 | 5,001.32 | 90 |
| மொத்தம் | | | **397,600.00** | **299,118.46** | **98,481.54** | |
| 130-01-16-00-1001 | பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 1,752,000.00 | 1,688,578.39 | 63,421.61 | 96 |
| 130-01-16-00-1003 | | | 1,034,400.00 | 996,335.48 | 38,064.52 | 96 |
| 130-01-16-00-1203-02 | | | 16,000.00 | 8,000.00 | 8,000.00 | 50 |
| 130-01-16-00-1205 | | | 100,000.00 | 99,876.00 | 124.00 | 100 |
| 130-01-16-00-1402 | | | 122,000.00 | 87,937.32 | 34,062.68 | 72 |
| 130-01-16-00-1403 | | | 1,020,000.00 | 523,341.60 | 496,658.40 | 51 |
| 130-01-16-0-01409-140 | | | 100,000.00 | 98,405.00 | 1,595.00 | 98 |
| 130-01-16-00-1303 | | | 100,000.00 | 100,000.00 | - | 100 |
| 130-01-16-00-1302 | | | 26,700.00 | 26,700.00 | - | **100** |
| 130-01-16-00-2001 (41) | | மூலதனச் செலவீனம | 10,261,600.00 | 8,232,261.97 | 2,029,338.03 | 80 |
| 130-01-02-00-2401 | | | 149,030.00 | 142,592.89 | 6,437.11 | 96 |
| 130-01-16-00-1101 | | மீண்டுவரும் செலவினம் | 19,760.00 | 16,708.00 | 3,052.00 | 85 |
| மொத்தம் | | | **14,701,490.00** | **12,020,736.65** | | |
| 149-01-18-00-1001 | கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 2,543,299.64 | 2,543,299.64 | - | 100 |
| 149-01-18-00-1003 | | | 1,057,800.00 | 1,014,999.80 | 42,800.20 | 96 |
| 149-01-08-00-1101 | | | 4,800.00 | - | 4,800.00 | - |
| 149-01-18-00-1201 | | | 4,800.00 | 3,000.00 | 1,000.00 | 75 |
| 149-01-19-00-1101 | | | 355,000.00 | 289,099.91 | 45,900.99 | 86 |
| 149-02-20-00-1201 | | | 74,873.00 | 74,873.00 | - | 100 |
| 149-02-20-00-1402 | | | 70,246.00 | 68,764.11 | 1,481.89 | 98 |
| 149-02-20-00-1403 | | | 140,612.50 | 68,485.11 | 72,127.39 | 49 |
| 149-02-20-00-1405 | | | 90,200.00 | 79,791.60 | 10,408.40 | 88 |
| 149-02-20-00-1409-140 | | | 57,915.06 | 57,127.50 | 787.56 | 99 |
| 149-02-20-00-1101 | | | 746,400.00 | 453,247.15 | 293,152.85 | 61 |
| 149-02-20-01-2202-26 | | மூலதனச் செலவீனம | 466,000.00 | 1,936,234.08 | 529,765.92 | 79 |
| 149-02-03-01-1001 | | மீண்டுவரும் செலவினம் | 1,392,846.00 | 1,392,846.00 | - | 100 |
| 149-02-03-01-1003 | | | 506,660.00 | 506,660.00 | - | 100 |
| 149-01-19-00-1201 | | | 20,500.00 | 15,500.00 | 5,000.00 | 76 |
| 149-01-20-00-2401 | | மூலதனச் செலவீனம் | 250,000.00 | 70,870.00 | 179,130.00 | 28 |
| 149-02-03-01-1409-40 | | மீண்டுவரும் செலவினம் | 35,045.00 | 35,045.00 | - | 100 |
| 149-02-20-00-1409-138 | | | 21,434.70 | 21,434.70 | - | 100 |
| 149-02-20-00-1404 | | | 54,000.00 | 54,000.00 | - | 100 |
| 149-02-20-00-1002 | | | 158,150.00 | 63,670.94 | 94,479.06 | 40 |
| 149-02-20-00-1303 | | | 990,000.00 | 855,984.63 | 134,015.37 | 86 |
| 149-02-03-48-2202 | | மூலதனச் செலவீனம் | 7,800,000.00 | 7,600,000.00 | 200,000.00 | 97 |
| 149-01-19-01-2509-93 | | | 55,000.00 | 55,000.00 | - | - |
| மொத்தம் | | | **18,874,781.90** | **17,259,932.27** | **1,614,849.63** | |
| 151-02-03-56-2202 | கடற்றொழில், நீர்யல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | மூலதனச் செலவீனம் | 28,620.00 | 28,620.00 | - | 100 |
| மொத்தம் | | | **28,620.00** | **28,620.00** | | |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 160-01-02-00-1001 | சுற்றாடல் அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 527,466.00 | 527,466.00 | - | 100 |
| 160-01-02-00-1003 | | | 254,700.00 | 251,100.00 | 3,600.00 | 99 |
| 160-01-02-00-1101 | | | 25,200.00 | 24,948.00 | 252.00 | 99 |
| 160-02-03-118-2507 | | மூலதனச் செலவீனம் | 420,000.00 | 416,287.25 | 3,712.75 | 99 |
| 160-02-03-153-2509-13 | | | 16,195,000.00 | 11,929,787.94 | 4,265,212.06 | 74 |
| மொத்தம் | | | **17,422,366.00** | **13,149,589** | **4,272,776.81** | |
| 171-02-08-01-1501 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | மீண்டு வரும் செலவினம் | 324,219,000.00 | 306,711,00 | 17,508,000.00 | 95 |
| 171-02-08-02-1501 | | | 103,494,200.00 | 94,482,600.00 | 9,011,600.00 | 91 |
| 171-02-08-03-1501 | | | 9,724,000.00 | 9,610,000.00 | 114,000.00 | 99 |
| 171-02-06-07-2202 | | மூலதனச் செலவீனம் | 108,500.00 | 47,500.00 | 61,000.00 | 44 |
| 171-02-06-00-1101 | | மீண்டுவரும் செலவினம் | 378,000.00 | 319,297.19 | 58,702.81 | 84 |
| 171-02-08-00-1201 | | | 110,250.00 | 83,250.00 | 27,000.00 | 76 |
| 171-02-08-00-1101 | | | 240,000.00 | 213,031.59 | 26,968.41 | 89 |
| 171-02-06-00-1201 | | | 155,250.00 | 148,500.00 | 6,750.00 | 96 |
| 171-02-06-04-2509 | | மூலதனச் செலவீனம் | 120,900.00 | 106,540.00 | 14,360.00 | 88 |
| 171-02-06-07-2509 | | | 2,743,300.00 | 2,735,190.00 | 8,110.00 | 100 |
| 171-02-08-00-2102 | | | 3,716,700.00 | 3,706,384.20 | 10,315.80 | 100 |
| 171-02-08-14-1409 | | மீண்டுவரும் செலவினம் | 89,000.00 | 88,910.00 | 90.00 | 100 |
| 171-02-08-14-2509 | | மூலதனச் செலவீனம் | 433,734.00 | 413,391.30 | 20,342.70 | 95 |
| 171-02-06-02-2509 | | | 100,000.00 | 100,000.00 | - | 100 |
| 171-02-08-00-2001 | | | 35,000,000.00 | 24,781,966.79 | 10,218,033.21 | 71 |
| 171-02-08-00-2103 | | | 1,169,500.00 | 1,162,578.48 | 6,921.52 | 99 |
| 171-01-02-00-1101 | | மீண்டுவரும் செலவினம் | 17,140.00 | 16,625.80 | 514.20 | 97 |
| மொத்தம் | | | **48,819,474.00** | **444,726,765.35** | **37,092,708.65** | - |
| 186-02-03-024-2509 | டிஜிட்டல் பொருளாதார மைச்சு | மூலதனச் செலவினம் | 13,000,000.00 | 12,893,605.80 | 106,394.20 | 99 |
| மொத்தம் | | | **13,000,000.00** | **12,893,605.80** | **106,394.20** | |
| 189-01-02-02-1509 | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 190,440.00 | 111,330.87 | 79,109.13 | 58 |
| 189-01-02-00-1101 | | | 48,000.00 | 46,488.39 | 1,511.61 | 97 |
| மொத்தம் | | | **238,440.0000** | **157.819.26** | **80,620.74** | |
| 194-01-02-149-083 | இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 410,000.00 | 141,875.00 | 268,125.00 | 35 |
| 194-02-07-01-2201 | | மூலதனச் செலவினம் | 1,995,456.00 | 1,995,456.00 | - | 100 |
| மொத்தம் | | | **2,405,456.00** | **2,137,331.00** | **268,125.00** | |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 193-01-02-02-2509 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | மூலதனச் செலவினம் | 66,550.00 | 66,550.00 | - | 100 |
| மொத்தம் | | | **66,550.00** | **66,550.00** | | |
| 196-02-07-00-1201 | விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 80,000.00 | 61,000.00 | 19,000.00 | 76 |
| 196-02-07-00-1402 | | | 45,000.00 | 11,500.00 | 33,500.00 | 26 |
| 196-02-07-00-1403 | | | 135,000.00 | 70,332.88 | 64,667.12 | 52 |
| 196-02-07-00-1101 | | | 312,000.00 | 166,235.59 | 145,764.41 | 53 |
| 196-02-07-00-2509 | | மூலதனச் செலவீனம் | 40,000.00 | 30,000.00 | 10,000.00 | 75 |
| 196-02-07-00-2102 | | | 53,962.00 | 53,883.00 | 79.00 | 100 |
| 196-02-07-00-1002 | | மீண்டுவரும் செலவினம் | 6,422.00 | - | 6,422.00 | - |
| 196-02-07-00-1409- | | | 5,850.00 | - | 5,850.00 | - |
| மொத்தம் | | | **678,234.00** | **392,951.47** | **285,282.53** | |
| 201-02-02-00-1101 | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | மீண்டுவரும் செலவினம் | 33,000.00 | 33,000.00 | - | |
| 201-02-02-00-1201 | | | 183,900.00 | 183,147.84 | 752.16 | 100 |
| 201-01-01-00-1409- | | | 2,100.00 | - | 2,100.00 | - |
| 201-02-02-06-1508 | | | 898 ,020.00 | 526,320.00 | 371,700.00 | 171 |
| 201-02-02-00-1409- | | | 19,267.00 | 12,901.66 | 6,364.34 | 149 |
| 201-02-02-08-2205 | | மூலதனச் செலவீனம் | 3,000,000.00 | 2,888,298.11 | 111,701.89 | 104 |
| 201-02-02-15-1501 | | மீண்டுவரும் செலவினம் | 5,647,500.00 | 5,222,500.00 | 425,000.00 | 108 |
| 201-02-02-11-2202-31 | | மூலதனச் செலவீனம் | 120,000.00 | 120,000.00 | - | 100 |
| 201-02-02-01-1501 | | மீண்டுவரும் செலவினம் | 109,763.00 | 108,363.00 | 1,400.00 | 101 |
| மொத்தம் | | | **10,013,550.00** | **9,094,530.61** | **919,019.39** | |
| 202-02-01-07-2205 | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் தணைக்களம் | மூலதனச் செலவீனம் | 800,000.00 | 800,000.00 | - | 100 |
| 202-02-01-00-1201 | | மீண்டுவரும் செலவினம் | 15,000.00 | 15,000.00 | - | 100 |
| மொத்தம் | | | **815,000.00** | **815,000.00** | - | |
| 203-02-01-00-1201 | கிறிஸ்தவ சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 1,500.00 | 1,500.00 | | 100 |
| 203-02-01-02-2102 | | மூலதனச் செலவீனம் | 66,034.25 | 66,034.25 | | 100 |
| 203-02-01-1508-18 | | மீண்டுவரும் செலவினம் | 20,000.00 | 20,000.00 | | 100 |
| மொத்தம் | | | **87,534.25** | **87,534.25** | | |
| 206-02-03-04-1508 | பண்பாட்டலுவல்கள் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 310,000.00 | 294,970.00 | 15,030.00 | 95 |
| 206-02-03-00-1201 | | | 130,000.00 | 119,999.60 | 10,000.40 | 92 |
| 206-02-03-00-1402 | | | 62,500.00 | 43,082.17 | 19,417.83 | 69 |
| 206-02-03-06-1409 | | | 379,600.00 | 355,095.00 | 21,505.00 | 94 |
| 206-02-02-02-1409 | | | 470,000.00 | 427,271.00 | 42,729.00 | 91 |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 206-02-03-00-1101 | பண்பாட்டலுவல்கள் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 344,000.00 | 115,343.65 | 228,656.35 | 34 |
| 206-02-03-03-1508 | | | 47,088.00 | 39,240.00 | 7,848.00 | 83 |
| மொத்தம் | | | **1,740,188.00** | **1,395,001.42** | **345,186.58** | |
| 210-01-02-0-1002 | அரச தகவல் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 12,596.00 | 12,595.48 | 0.52 | 100 |
| 210-01-02-0-1101 | | | 86,090.00 | 81,928.63 | 4,161.37 | 95 |
| 210-01-02-0-1201 | | | 7,200.00 | 7,200.00 | - | 100 |
| 210-01-02-0-1205 | | | 25,420.00 | 25, 420.00 | - | 100 |
| 210-01-02-0-1402 | | | 24,600.00 | 20,831.95 | 3,768.05 | 85 |
| 210-01-02-0-1403 | | | 97,500.00 | 97,500.00 | - | 100 |
| 210-01-02-2002 | | மூலதனச் செலவீனம் | 132,625.75 | 132,625.75 | - | 100 |
| மொத்தம் | | | **386,031.75** | **378,101.80** | **7,929.94** | |
| **216-02-03-08-1501** | **சமூக சேவைகள் திணைக்களம்** | மீண்டுவரும் செலவினம் | 653,000.00 | 583,465.00 | 69,535.00 | 89 |
| **216-02-02-00-1001** | | | 9,488,214.00 | 8,329,726.37 | 1,158,487.63 | 88 |
| **216-02-02-00-1003** | | | 4,431,900.00 | 3,800,174.00 | 631,726.00 | 86 |
| **216-02-02-00-1101** | | | 437,600.00 | 299,669.70 | 137,930.30 | 68 |
| **216-02-02-00-1201** | | | 137,500.000 | 120,500.00 | 17,000.00 | 88 |
| **216-02-03-05-2202** | | மூலதனச் செலவீனம் | 515,055.00 | 484,529.25 | 30,525.75 | 94 |
| **216-02-03-01-1501** | | மீண்டுவரும் செலவினம் | 1,124,900.00 | 479,155.00 | 645,745.00 | 43 |
| **216-02-03-02-1501** | | | 25,000.00 | 25,000.00 | - | 100 |
| **216-02-03-00-1402** | | | 50,000.00 | - | 50,000.00 | - |
| மொத்தம் | | | **16,863,169.00** | **4,122,219.32** | **2,740,949.68** | |
| 217-02-02-00-1101 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 312,000.00 | 223,452.97 | 88,547.03 | 72 |
| 217-02-02-00-1201 | | | 58,500.00 | 54,770.00 | 3,730.00 | 94 |
| 217-02-02-05-2202 | | மூலதனச் செலவீனம் | 1,029,600.00 | 914,893.00 | 114,707.00 | 89 |
| 217-02-02-06-2202 | | | 243,500.00 | 233,500.00 | 10,000.00 | 96 |
| மொத்தம் | | | **1,643,600.00** | **1,426,615.97** | **216,984.03** | |
| 219-02-02-00-1101 | விளையாட்டு மேம்பாட்டுத் துறை | மீண்டுவரும் செலவினம் | 36,280.00 | 10,005.00 | 26,275.00 | 28 |
| 219-02-02-00-1201 | | | 18,820.00 | 15,997.80 | 2,822.20 | 85 |
| 219-02-02-00-1002 | | | 18,584.48 | 18,584.48 | - | 100 |
| 219-02-02-00-1409-140 | | | 130,650.00 | 74,325.00 | 56,325.00 | **57** |
| மொத்தம் | | | **204,334.48** | **118,912.28** | **85,422.20** | |
| 227-01-01-00-1001 | ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 10,901,040.90 | 10,901,040.9 | - | 100 |
| 227-01-01-00-1003- | | | 4,820,714.94 | 4,820,714.94 | - | 100 |
| 227-01-01-00-1201 | | | 198,000.00 | 147,850.00 | 50,150.00 | 75 |
| 227-01-01-00-1101 | | | 194,501.50 | 194,501.50 | - | 100 |
| 227-01-01-00-1302 | | | 41,500.00 | - | 41,500.00 | - |
| 227-01-01-00-1303 | | | 11,220.00 | 11,200.00 | 20.00 | 100 |
| 227-01-01-00-1409- | | | 9,800.00 | 9,800.00 | - | 100 |
| மொத்தம் | | | **16,176,777.34** | **16,085,107.34** | **91,670.00** | |
| 237-01-02-01-2509 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | மூலதனச் செலவீனம் | 46,000,000.00 | 45,744,863.93 | 255,136.07 | 99 |
| மொத்தம் | | | **46,000,000.00** | **45,744,863.93** | **255,136.07** | |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 247-01-01-00-2001 | இலங்கை சுங்கம் | மூலதனச் செலவீனம் | 10,100,000.00 | 7,935,905.98 | 2,164,094.02 | 79 |
| மொத்தம் | | | **10,100,000.00** | **7,935,905.98** | **2,164,094.02** | **79** |
| 248-01-01-00-2001 | இலங்கை மதுவரித் திணைக்களம் | மூலதனச் செலவீனம் | 4,928,400.00 | 3,747,460.00 | 1,180,939.60 | 76 |
| மொத்தம் | | | **4,928,400.00** | **3,747,460.00** | **1,180,939.60** | |
| 252-01-01-08-2507-13 | தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் | மூலதனச் செலவீனம் | 22,840,095.00 | 22,606,046.67 | 234,048.33 | 99 |
| 252-01-01-1409-34 | | மீண்டுவரும் செலவினம் | 729,548.00 | 647,006.46 | 82,541.54 | 99 |
| 252-01-01-1202-09 | | | 207,379.00 | 207,376.00 | - | 100 |
| 252-01-01-00-1301 | | | 358,710.00 | 358,710.00 | - | 100 |
| 252-01-01-00-1403 | | | 266,967.59 | 266,967.59 | - | 100 |
| 252-01-01-00-1201 | | | 37,812.48 | 37,812.48 | | 100 |
| 252-01-01-00-1402 | | | 68,933.95 | 68,933.95 | | 100 |
| 252-01-01-00-1101 | | | 461,320.00 | 454,409.98 | 6,910.02 | 98 |
| 252-01-01-00-1002 | | | 267,757.27 | 267,198.80 | 558.47 | 100 |
| 252-01-01-11-2507 | | மூலதனச் செலவீனம் | 2,049,509.76 | 993,969.54 | 1,055,540.22 | 48 |
| 252-01-01-1409(138) | | மீண்டுவரும் செலவினம் | 233,418.05 | 233,418.05 | **-** | **100** |
| மொத்தம் | | | **27,521,448.10** | **26,141,849.52** | **1,379,598.58** | |
| 253-01-02-01-1502-1 | ஓய்வூதிய திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 201,000.00 | 121,840.00 | 79,160.00 | 61 |
| 253-01-02-02-1502-2 | | | 590,000.00 | 530,568.80 | 59,431.20 | 90 |
| 253-01-02-04-1502-12 | | | 1,951,725.62 | 1,951,725.62 | - | 100 |
| 253-01-02-00-1002 | | | 310,000.00 | 232,671.06 | 77,328.94 | 75 |
| 253-01-02-00-1101 | | | 85,000.00 | 67,435.80 | 17,564.20 | 79 |
| 253-01-02-03-1502-7 | | | 25,000.00 | 13,000.00 | 12,000.00 | 52 |
| 253-01-02-03-1502-8 | | | 30,000.00 | 11,,500.00 | 18,500.00 | 38 |
| மொத்தம் | | | **3,192,725.62** | **2,928,741.28** | **263,984.34** | |
| 254-01-02-00-2001 | தலைமை பதிவாளர் திணைக்களம் | மூலதனச் செலவீனம் | 661,641.40 | 661,641.40 | - | 100 |
| மொத்தம் | | | **661,641.40** | **661,641.40** | | |
| 282-02-03-05-2105 | நீர்பாசனத் தணைக்களம் | மூலதனச் செலவீனம் | 124,400.00 | 124,390.25 | **9.75** | **100** |
| மொத்தம் | | | **124,400.00** | **124,390.25** | **9.75** | |
| 284-01-01-00-1508 | வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 14,023,000.00 | 13,451,597.00 | 571,403.00 | 96 |
| மொத்தம் | | | **14,023,000.00** | **13,451,597.00** | **571,403.00** | |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 286-02-01-00-1001 | காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 21,287,782.00 | 21,216,481.96 | 71,300.04 | 100 |
| 286-02-01-00-1002 | | | 755,250.02 | 718,808.58 | 36,441.44 | 95 |
| 286-02-01-00-1003 | | | 11,041,900.00 | 11,008,912.88 | 32,987.12 | 100 |
| 286-02-01-00-1101 | | | 892,125.50 | 602,129.26 | 289,996.24 | 67 |
| 286-02-01-00-1201 | | | 432,349.40 | 431,688.79 | 660.61 | 100 |
| 286-02-01-00-1202-02 | | | 150,000.00 | - | 150,000.00 | - |
| 286-02-01-00-1202-09 | | | 881,850.00 | 878,711.00 | 3,139.00 | 100 |
| 286-02-01-00-1301 | | | 334,139.00 | 206,077.19 | 128,061.81 | 62 |
| 286-02-01-00-1302 | | | 190,294.00 | 190,290.00 | 4.00 | 100 |
| 286-02-01-00-1303 | | | 166,650.00 | 157,600.00 | 9,590.00 | 94 |
| 286-02-01-00-1402 | | | 353,335.85 | 342,911.09 | 10,424.76 | 97 |
| 286-02-01-00-1403 | | | 346,485.83 | 156,377.84 | 190,107.99 | 45 |
| 286-02-01-00-1404 | | | 1,825.00 | 1,824.20 | 0.80 | 100 |
| 286-02-01-00-1409-140 | | | 148,230.00 | 122,040.00 | 26,190.00 | 82 |
| 286-02-01-00-1506 | | | 140,000.00 | 133,108.97 | 6,891.03 | 95 |
| 286-02-01-00-2003 | | மூலதனச் செலவீனம் | 50,500.00 | 50,500.00 | - | 100 |
| 286-02-01-00-2001 | | | 1,934,315.00 | 1,933,537.77 | 777.23 | 100 |
| 286-02-01-00-2105 | | | 288,001.00 | 284,166.34 | 3,834.66 | 99 |
| 286-02-01-00-1203-002 | | மீண்டுவரும் செலவினம் | 4,000.00 | 4,000.00 | - | 100 |
| 286-02-01-00-1409-73 | | | 457,997.00 | 358,347.00 | 99,650.00 | 78 |
| 286-02-01-00-2102 | | மூலதனச் செலவீனம் | 914,745.00 | 914,741.00 | 4.00 | 100 |
| 286-02-01-00-2106 | | | 32,900.00 | 29,850.00 | 3,050.00 | 91 |
| 286-02-01-00-2103 | | | 32,900.00 | 29,850.00 | 3,050.00 | 91 |
| மொத்தம் | | | **42,564,604.60** | **41,055,617.39** | **1,508,987.21** | |
| 290-01-01-00-2001 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | மூலதனச் செலவீனம் | 2,212,890.00 | 2,211,546.80 | 1,343.20 | 100 |
| மொத்தம் | | | **2,212,890.00** | **2,211,546.80** | **1343.20** | |

| செலவு விவரங்கள் | அமைச்சு/ திணைக்களம் | செலவின வகை | ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | மிகுதி ஒதுக்கீடு (ரூ.) | பயன்படுத்திய ஒக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| 307-2-1-0-1003 | போக்குவரத்து திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 1,200,000.00 | 1,172,116.04 | 27,883.96 | 98 |
| 307-2-1-0-1003 | | | 320,000.00 | 282,000.00 | 38,000.00 | 88 |
| 307-2-1-0-1201 | | | 45,000.00 | 44,686.88 | 313.12 | 99 |
| 307-2-1-0-1402 | | | 160,000.00 | 131,453.89 | 28,546.11 | 82 |
| 307-2-1-0-1403 | | | 600,000.00 | 530,029.04 | 69,970.96 | 88 |
| 307-2-1-0-1404 | | | 18,500.00 | 17,782.62 | 717.38 | 96 |
| 307-2-1-0-1405 | | | 450,000.00 | 438,640.34 | 11,359.66 | 97 |
| 307-2-1-0-1407 | | | 1,030,000.00 | 1,017,000.00 | 13,000.00 | 99 |
| 307-2-1-0-1409-140 | | | 45,000.00 | 45,000.00 | - | 100 |
| 307-2-1-0-1302 | | | 25,000.00 | 19,000.00 | 6,000.00 | 76 |
| 307-2-1-6-1409 | | | 86,000.00 | 82,405.00 | 3,595.00 | 96 |
| 307-2-1-10-2104 | | மூலதனச் செலவீனம் | 5,795,150.00 | 5,640,150.00 | 155,000.00 | 97 |
| 307-2-1-0-1101 | | மீண்டுவரும் செலவினம் | 25,000.00 | 8,912.00 | 16,087.64 | 36 |
| 307-2-1-0-1202-009 | | | 35,000.00 | 19,941.00 | 15,059.00 | 57 |
| மொத்தம் | | | **9,834,650.00** | **9,449,117.17** | **385,532.83** | |
| 326-1-1-0-1101 | சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் | மீண்டுவரும் செலவினம் | 144,000.00 | 129,408.87 | 14,591.13 | 90 |
| 326-1-1-0-1201 | | | 9,000.00 | 9,000.00 | - | 100 |
| மொத்தம் | | | 153,000.0 | 138,408.87 | 14,591.13 | |
| 327-2-1-0-2507 | நிலப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் தணைக்களம் | மூலதனச் செலவீனம் | 1,175,00 | 1,173,757.00 | 1,243.00 | 100 |
| 327-2-1-0-2509 | | | 158,000.0 | 117,990.00 | 40,010.00 | 75 |
| 327-2-1-0-1101 | | மீண்டுவரும் செலவினம் | 248,00 | 198,278.00 | 49,722.00 | 80 |
| 327-2-1-0-1201 | | | 43,000.00 | 43,000.00 | - | 100 |
| மொத்தம் | | | **1,624,000.00** | **1,533,025.00** | **90,975.00** | |
| 328-2-2-11-2509 | மனித வளம் மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | மூலதனச் செலவீனம் | 358,200.00 | 356,887.00 | 1,313.00 | 100 |
| 328-1-1-0-1402 | | மீண்டுவரும் செலவினம் | 42,989.25 | 36,121.55 | 6,867.70 | 84 |
| 328-1-1-0-1101 | | | 369,000.00 | 360,741.33 | 8,258.67 | 98 |
| 328-1-1-0-1201 | | | 20,000.00 | 13,388.00 | 6,612.00 | 67 |
| 328-1-1-0-2102 | | மூலதனச் செலவீனம் | 80,820.00 | 80,820.00 | - | 100 |
| 328-1-1-0-1403 | | மீண்டுவரும் செலவினம் | 36,000.00 | 36,000.00 | - | 100 |
| 328-2-2-12-2509 | | மூலதனச் செலவீனம் | 133,300.00 | 133,300.00 | - | 100 |
| மொத்தம் | | | **1,040,309.25** | **1,017,257,88.00** | **23,051.37** | |

### 3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையிடுவதன் செயலாற்றுகை 2025

| சொத்துக் குறியீடு | குறியீடு விளக்கம் | கணக்கெடுப்பு வாரிய அறிக்கையின் படி இருப்பு 01.01.2024 | நிதிநிலை அறிக்கையின்படி இருப்பு 31.12.2024 | இன்னும் கணக்கிடப் பட வேண்டிய வை | முன்னேற்ற விகிதம் % |
|---|---|---|---|---|---|
| 6111107 | அரசவிடுதி | 242,213,643.47 | 242,213,643.47 | - | 100% |
| 6111108 | சுற்றுலாவிடுதி | 4,500,000.00 | 4,500,000.00 | - | 100% |
| 6111201 | அலுவலககட்டிடம் | 801,169,930.19 | 813,559,361.10 | - | 100% |
| 6112101 | பயணிகள் பேருந்து | 154,204,717.50 | 155,999,863.50 | - | 100% |
| 6112102 | சரக்குவாகனம் | 24,500,000.00 | 24,500,000.00 | - | 100% |
| 6112103 | விவசாயவாகனங்கள் | 33,000,000.00 | 33,000,000.00 | - | 100% |
| 6112109 | மோட்டார் வாகனம் | 1,586,600.00 | 1,552,600.00 | - | 100% |
| 6112201 | அலுவலகஉபகரணங்கள் | 16,244,572.09 | 16,141,598.09 | - | 100% |
| 6112202 | கணணிஉதிரிபாகங்கள் | 52,729,438.81 | 61,635,394.38 | - | 100% |
| 6112203 | மின்உபகரணங்கள் | 38,959,331.13 | 44,433,495.98 | - | 100% |
| 6112204 | தொடர்பாடல் உபகரகரணங்கள் | 10,193,716.96 | 11,864,877.77 | - | 100% |
| 6112205 | தளபாடங்கள் | 64,281,372.73 | 74,210,751.37 | - | 100% |
| 6114100 | வர்த்தகம் மற்றும் சேவை | 288,953,000.00 | 288,953,000.00 | - | 100% |
| 614100 | காணி | 67,464,244.30 | 77,407,443.08 | - | 100% |
| **மொத்தம்** | | **1800,000,567.18** | **1,849,972,028.74** | | |

## 3.9 கணக்காய்வு அதிபதி அறிக்கை

*EPCG/TR/A/DST//02/2025/01* *2026 மே 25*

*கணக்கீட்டு உத்தியோகத்தர்*
*மாவட்ட செயலகம்*
*திருகோணமலை*

*தலைப்பு 271 - திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2025 திசெம்பர் 31 இல்; முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை.*

---

*1. நிதிக்கூற்றுக்கள்*

*1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்*

*தலைப்பு 271 - திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2025 திசெம்பர் 31 இல்; உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல்; கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 மே 22 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன்; சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.*

*இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2025 திசெம்பர் 31 இல்; உள்ளவாறான திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல்;, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும்; நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.*

### 1.2 *கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை*

***இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.***

*1.3* *விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை*

*இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02℅2025 இன் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை திருகோணமலை மாவட்ட செயலகம்;, பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.*

*1.4* *நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு*

*'அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 டிசம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02℅2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.*

*2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.*
*தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின்* ***பிரகாரம் மாவட்ட செயலகத்தின்*** *நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

***1.5*** *நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு*

*ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்;.*

*இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்*

- *வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டபட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல்; அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.*
- *உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.*

- *வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.*

- *நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.*

- *எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.*

### 1.6 *நிதிக் கூற்றுகள் மிதான கருத்துக்கள்*

#### **1.6.1 *நிதியல்லா சொத்துக்கள்***

*பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

(அ) 2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான திறைசேரி பொழிப்பு (SA-82) நிதிசாரா சொத்துக்கள் கூற்றின் பேரேட்டு இலக்கம் 9152 இன் கீழ் உள்ளடக்கப்பட்ருந்த 04 சொத்துத் தொகுதிகளின் இறுதி மீதிகள், 2025 ஆம் ஆண்டிற்கான திறைசேரி பொழிப்பு (SA-82) நிதி***யல்லா*** சொத்துக்கள் கூற்றின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் போது ரூ. 1,409,504/- கணக்கீட்டு வேறுபாடு காணப்பட்டதுடன், அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) திறைசேரி பொழிப்பு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றின் பேரேட்டு இலக்கம் 9152 இன் (போக்குவரத்து உபகரணங்களும் ஏனைய இயந்திர உபகரணங்களும்) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துத் தொகுதியின் ஆரம்ப மீதியுடனான கூட்டல்களினதும் மற்றும் வருடத்திற்கான கொள்வனவுகளினதும்

மொத்தப் பெறுமதி ரூ. 31,060,895/- ஆகக் காணப்பட்ட போதிலும், மாவட்ட செயலகத்தினாலும் புதிய சிகாஸ் திட்டத்தினாலும் (SA-100) தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதிக்கு (Trial Balance) அமைய அதன் பெறுமதி ரூ. 31,054,045/- ஆகக் காணப்பட்டதால் ரூ. 6,850/- இன் (அல்லது ரூ. 9,850)* வேறுபாடு நிலவியது.

(இ) திறைசேரி பொழிப்பு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றின் குறை வேலைகளின் (பேரேட்டு இலக்கம் 9160) கீழ் நடப்பு வருடத்தில் எவ்வித பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும், திணைக்களத்தினாலும் புதிய சிகாஸ் திட்டத்தினாலும் (SA-100) தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் மூலதனச் சொத்துக்கள் ஒதுக்கீட்டின் (குறை வேலை) கீழ் ரூ. 2,859,000/- பற்று வைக்கப்பட்டு, குறை வேலைகளின் கீழ் அதே பெறுமதி வரவு வைக்கப்பட்டிருந்தது

(ஈ) திறைசேரி பொழிப்பு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றின் பேரேட்டு இலக்கம் 9151 இன் 1.2 இன் கீழ் குடியிருப்பு அல்லாத கட்டடங்களின் கீழ் உள்ளடக்கப்பட்ருந்த அலுவலகக் கட்டட இனத்தின் (குறியீட்டு இலக்கம் - 6111201) கொள்வனவுப் பெறுமதி ரூ. 2,859,000/- ஆகக் காணப்பட்ட போதிலும், அதன் 1.2 இன் கீழ் குடியிருப்பு அல்லாத கட்டடங்களின் (61112) உப-மொத்தம் ரூ. 74,000/- ஆகக் காணப்பட்டதால் ரூ. 2,785,000/- இன் வேறுபாடு காணப்படுகின்றது

(உ) ஏ.சி.ஏ.- 06 (ACA-06) படிவத்திற்கு அமைய 2025 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்கள், ஆவணங்கள் மற்றும் உபகரணங்களின் இறுதி மீதி ரூ. 1,847,187,029/- எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பேரேட்டு இலக்கம் 9151 இன் கீழ் குடியிருப்பு அல்லாத கட்டடங்களின் (61112) உப-மொத்தத்தின் இறுதி மீதிக்கும் மற்றும் அதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்களின்* (6111201) இறுதி மீதிக்கும் இடையே ரூ. 2,785,000/- இன் வேறுபாடு அவதானிக்கப்பட்டமையினால், நிதிநிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள், ஆவணங்கள் மற்றும் உபகரணங்களின் இறுதி மீதியின் நிச்சயத்தன்மை குறித்து கணக்காய்வு திருப்தியடைய முடியவில்லை.

(ஊ) நிதியல்லா சொத்துக்கள் கூற்றின்படி 9152 சொத்துத் தொகுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள போக்குவரத்து உபகரணங்களின் கீழ் ரூ. 34,000/- பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று அகற்றப்பட்டிருந்த போதிலும், அம்மோட்டார் சைக்கிளை அகற்றுவதற்கான நடைமுறைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை அத்துடன் நிதிப் பிரமாணங்கள் 770(4) இற்கு அமைய, அவ்வாறு அகற்றப்பட்ட பெறுமதியை கணக்குகளில் இனம் காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### *1.6.2 வைப்புக் கணக்கு*

(அ) 2025 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான தயாரிக்கப்பட்டிருந்த வைப்பு கணக்கிணங்கக் கூற்று மற்றும் வைப்புப் பேரேடு ஆகியவற்றிற்கு அமைய, தீர்க்கப்படாத ரூ. 732,205/- கொண்ட வைப்பு மீதி வேறுபாடு காணப்பட்டது

(ஆ) கந்தளாய் பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டு வரும் வைப்புப் பேரேட்டைப் பரிசோதிக்கும் போது, நிதிப் பிரமாணங்கள் 571(3) இற்கு அமைய, இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்த ரூ. 263,117/- கொண்ட வைப்புப் பணம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

**1.6.3 பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணப்படாமை**

மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகங்களினாலும் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், சில பதிவேடுகள் முறையான வகையிலும் இற்றைப்படுத்தப்பட்ட நிலையிலும் பேணப்படவில்லை என்பது மாதிரித் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| **பொருட்களின் இருப்பு பதிவேடு** கந்தளாய், சேருவில, மொறவெவ, கோமரங்கடவல, பதவி ஸ்ரீபுர, வெருகல், கிண்ணியா பிரதேச செயலகங்கள் | நிதிப் பிரமாணங்கள் 763 | இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| பிணைப் பதிவேடு - மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்கள் | நிதிப் பிரமாணங்கள் 891 (1) | பேணப்பட்டு வந்திருக்கவில்லை. |
| சேதங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு - மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்கள் | நிதிப் பிரமாணங்கள் 110 (1) | இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை |

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவிற்கு அமைய, பின்வரும் விடயங்களை நான் பிரகடனப்படுத்துகின்றேன்.

(அ) நிதிச் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்துப் போகின்றன என்பதையும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிச் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டபட்டுள்ள பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை .

| **கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** | **நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| ***1.6.1 (அ)*** | *சரியான பெறுமதிகளுக்கு அமைய ஆரம்ப மீதிகள் கணக்கில் பதியப்படல் வேண்டும்.* | ***1.6.1 (அ)*** |
| ***1.6.1 (ஆ)*** | *பதிவேடுகளுக்கு இடையிலான மீதிகளின் சரியான தன்மை பேணப்படல் வேண்டும்.* | ***1.6.1 (ஆ)*** |
| ***1.6.1 (இ)*** | *பதிவேடுகளுக்கு இடையிலான மீதிகளின் சரியான தன்மை பேணப்படல் வேண்டும்.* | ***1.6.1 (இ)*** |

*3. நிதி மீளாய்வு*

*3.1 வருமான முகாமைத்துவம்*

*தாபனக் விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவிற்கு அமைய, உரிய உத்தியோகத்தர்களுக்குரிய உத்தியோகபூர்வ இல்ல வாடகையைக் கணித்து, அதனை அவர்களிடம் இருந்து முறையாக அறவிடுதல் வேண்டும். ஆயினும், திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 06 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகைப்பணமாகிய ரூ. 173,395/- கொண்ட தொகை 2025 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் நிலுவையாகக் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. மேலும், இதனுள் T75 இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகைப்பணம் 2023 ஏப்ரல் மாதத்தில் இருந்து இதுவரையான 02 வருடங்களும் 09 மாதங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியாக நிலுவையாகக் காணப்படுவதுடன், அத்தொகை ரூ. 127,840/- ஆகும்.*

*3.2 பொறுப்புக்களும் கடப்பாடுகளுக்கு உட்படுதலும்*

*திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களின் 2025 ஆம் ஆண்டிற்குரியதாக, 2026 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூ. 2,856,779/- செலவினத்தைக் கொண்ட 157 கொடுப்பனவுப் பட்டியல்களின் (Bills) பெறுமதி, 2025 ஆம் ஆண்டின் நிதிச் கூற்றுக்களில் பொறுப்புக்களாக இனம் காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன் ஏனைய 05 பிரதேச செயலகங்களின் நிலமையும் இதற்கு ஒத்ததாக இருக்கக்கூடும் என்பதும் அவதானிக்கப்பட்டது.*

***3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட் டுள்ள நிதியேற்பாட்டடின் பயன்பாடு***

*(அ) சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் 2015 ஏப்ரல் 27 ஆம் திகதிய 13/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 12 ஆம் பந்திக்கு அமைய, ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் காணப்படும் பட்சத்தில், அவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக குழுவொன்றின் தீர்மானம் பெறப்பட வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் ஒருவருக்கு மாத்திரமே இவ் உதவி உரித்தாகின்ற போதிலும், அவ்வறிவுறுத்தல்களுக்கு முரணாக எவ்வித குழுத் தீர்மானமுமின்றி 08 பயனாளி நபர்களுக்காக 11 மாதக் காலப்பகுதிக்கு ரூ. 660,000/- கொண்ட தொகை கிண்ணியா பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.*

*(ஆ) 2019/20 பெரும்போகம் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான நெல் கொள்வனவு செய்யும் அவசர வேலைத்திட்டத்தின் கீழ், கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவின் நான்கு நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்தும், பதவி ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு நெல் ஆலை உரிமையாளரிடமிருந்தும் மற்றும் சேருவில பிரதேச செயலாளர் பிரிவின் இரண்டு நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்தும் என மொத்தம் ஏழு நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 47,957,307/- கொண்ட மொத்தப் பெறுமதியான பணம், ஐந்து வருடங்களுக்கும் மேலான காலப்பகுதி கடந்த போதிலும் மாவட்ட செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.*

*(இ) உள்ளக முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ், சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவின் ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள எட்டு குடியிருப்பாளர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூ. 5,600,000/- பெறுமதியான எட்டு வீடுகள் 2025 அக்டோபர் 31 ஆம் திகதியிலும் பூர்த்தி செய்யப்படாமையினால், உரிய பயனாளிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூ. 4,125,000/- கொண்ட தொகையானது பயனற்ற செலவீனமாக மாறியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.*

*(ஈ) உள்ளக முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ், கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவின் குடியிருப்பாளர்கள் 05 பேருக்காக 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூ. 4,200,000/- பெறுமதியான 05 வீடுகள் 2025 டிசம்பர் 12 ஆம் திகதியிலும் பூர்த்தி செய்யப்படாமையினால், உரிய பயனாளிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூ. 3,325,000/- கொண்ட தொகையானது பயனற்ற செலவீனமாக மாறியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.*

*(உ) 2025 ஆம் ஆண்டின் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், பட்டினமும் சூழலும், கிண்ணியா, வெருகல், சேருவில, கந்தளாய், தம்பலகாமம் மற்றும் மூதூர் ஆகிய 07 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 316 பயனாளிகளினால் ரூ. 1,422,000/- பெறுமதியான போஷாக்கு உணவுப் பொதிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.*

*3.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்று படுத்தல்கள் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் மாவட்ட செயலகத்தின் நிதி நிர்வாகத்திற்காக வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை யொன்றை தயாரித்து பேணிச் செல்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மோற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எமுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளபட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்பிக்க படவில்லை*

3.5. பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் (F.R.) 104(4) ஆம் பிரிவு | KB-0957 இலக்க மொன்டெரோ ஜீப் வண்டி 2023 ஜனவரி 28 ஆம் திகதியன்று பாரிய விபத்துக்குள்ளானதுடன் அதன் ஓட்டுநரும் மரணமடைந்திருந்தார். இது தொடர்பான விசாரணைகளின் பின்னர், இழப்பு ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் 2 (iv) ஆம் பந்தி | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது, விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்துவது அவசியமானதாகும். ஆயினும் கிண்ணியா, கோமரங்கடவல, வெருகல், சேருவில, கந்தளாய், தம்பலகாமம், மூதூர் ஆகிய பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் அவ்வாறு செயற்படாமல், கணக்காய்வுக்குரிய வருடத்தினுள் மொத்தமாக ரூ. 1,987,988/- ஐ மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளமாகப் பெற்றுள்ளனர் |
| (இ) 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள்அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும், 12 மாதக் காலப்பகுதி கடந்த பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடிய பின்னர் அல்லது எஞ்சினுடன் தொடர்புடைய பிரதான பழுதுபார்ப்புக்குப் பின்னர் ஆகிய காரணங்களுள் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர், மீண்டும் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனையொன்று நடத்தப்பட வேண்டும். ஆயினும், திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 225-993 இலக்க கப் (Cab) வாகனத்திற்கு 2023 மே 23 ஆம் திகதிக்குப் பின்னர் 2025 யூலை 18 ஆம் திகதி வரை எவ்வித எரிபொருள் நுகர்வுப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டிருக்கவில்லை. |

3.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) மாவட்ட செயலாளரின் கட்டளைகளுக்கு அமைய, சேருவில மற்றும் கந்தளாய் பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான குழும வாகனத்திற்கான ஆகக்கூடிய மாதாந்த எரிபொருள் எல்லை 100 லீற்றர்களாக இருந்தபோதிலும், கணக்காய்வுக்குரிய வருடத்தில் முறையே 2025 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்குள் அவ் எல்லையைத் தாண்டி மேலதிகமாக 432 லீற்றர்களும் 442 லீற்றர்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கென ரூ. 125,563/- மற்றும் ரூ. 125,281/- கொண்ட தொகையானது நிதிப் பிரமாணங்கள் (F.R.) 136 மற்றும் 138(2) ஆகியவற்றையும் மீறிச் செலுத்தப்பட்டிருந்தது.

*(ஆ) ரூ. 749,436/- பெறுமதியுடைய 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் செலவீனங்களைச் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம் மாத்திரமே இடப்பட்டிருந்ததுடன், அவரது பதவியின் உத்தியோகபூர்வ முத்திரை இட்டிருக்கப்படவில்லை. மேலும், உரிய கொடுப்பனவுப் தொகையானது எழுத்துக்களினால் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது டன் இதற்கமைய, நிதிப் பிரமாணம் (F.R.) 138 ஐப் பின்பற்றி கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.*

*3.7 வைப்புகள்*

*(அ) 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்டிருந்த வைப்பு இணக்க கூற்று மற்றும் வைப்புப் பேரேடு ஆகியவற்றிற்கு அமைய, தீர்க்கப்படாத பேரேட்டைப் ரூ. 732,205/- கொண்ட வைப்பு மீதியொன்று காணப்பட்டது.*

*(ஆ) கந்தளாய் பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டு வரும் வைப்புப் பேரேட்டைப் பரிசோதித்த போது, நிதிப் பிரமாணம் (F.R.) 571(3) இற்கு அமைய, இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்த ரூ. 263,117/- கொண்ட வைப்புப் பணம் தொடர்காக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை*

***4.** செயற்பாட்டு மீளாய்வு*

***4.1** செயலாற்றல்*

***4.1.1** பெறுகைகள் திட்டம்*

*உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2018 ஜனவரி 29 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்கக் கணக்குச் சுற்றறிக்கைக்கு அமைய, பிரதேச செயலகங்களினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு, 05 பிரதான சேவைகளுக்குச் சார்பாக உகந்த இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு, அவ் இலக்குகள் தொடர்பான அறிக்கையொன்று மாவட்ட செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாவட்ட செயலகத்தினால் அச்சுற்றறிக்கையின் 2.5 மற்றும் 2.6 ஆம் பந்திகளுக்கு அமைய, அனைத்துப் பிரதேச செயலகங்களினதும் சிறந்த இலக்குகளைச் சுருக்கமாகத் தொகுத்துத் தயாரிக்கப்பட்ட அறிக்கை யொன்றின், அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கிடைக்கும் வகையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு ஒவ்வொரு வருடமும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும், பிரதேச செயலகங்களும் மாவட்ட செயலகமும் 2024 ஆம் ஆண்டிற்குரியதாக அவ்வறிக்கைகளைச் சமர்பிக்கப் பட்டிருக்கவில்லை*

*4.1.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை*

*(அ) பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்றிருந்த 1233 காணி விண்ணப்பங்கள் சம்பந்தமாக, கணக்காய்வுத் திகதியான 2026 ஜனவரி 23 ஆம் திகதியிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(ஆ) 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற 2313 காணி விண்ணப்பங்களுக்காக, முறைப்படியான காணி கச்சேரி நடாத்தி, உரிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வெருகல் பிரதேச செயலகமானது 2025 அக்டோபர் 17 ஆம் திகதியிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(இ) சேருவில பிரதேச செயலாளர் பிரிவின் சிறிமங்களபுர மற்றும் சோமபுர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியாக சட்டபூர்வமான உரிமையின்றி அனுபவித்து வரும் 120 ஏக்கர், 03 ரூட், 19 பேர்ச்சர்ஸ் நிலப்பரப்பைக் கொண்ட 185 காணித் துண்டுகளுக்குரிய தற்காலிக குடியிருப்பாளர்களினால், தமது காணித் துண்டுகளுக்கான தேவையான அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், 2025 அக்டோபர் 31 ஆம் திகதியிலும் உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.*

*(ஈ) 2024 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் மற்றும் அரச காணிகள் கட்டளைச்சட்டம் ஆகியவற்றிற்கு அமைய, காணிகளைக் கோரியிருந்த 59 நபர்களுக்காகச் சேருவில பிரதேச செயலகத்தினால் காணி கச்சேரி நடாத்தி, உரிய தற்காலிக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2025 அக்டோபர் 31 ஆம் திகதியிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(உ) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட காணி ஒதுக்கிலிருந்து விடுவிப்பதற்காக 2021 மே 09 ஆம் திகதியன்று உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த, போதிலும் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 3912.33 ஏக்கர் காணிப் பரப்பளவிற்காக, கணக்காய்வுத் திகதியான 2025 டிசம்பர் 12 ஆம் திகதி வரையிலும் அக்குறித்த நீக்கம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 04 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியாக அவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.*

*(ஊ) 2023 செப்டம்பர் 13 மற்றும் அக்டோபர் 09 ஆம் திகதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கபட்ட தீர்மானங்களுக்கு அமைய, அதுவரை விடுவிக்கப்படாமலிருந்த கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான எஞ்சிய 2445.57 ஏக்கர் காணிப் பரப்பளவையும் ஒதுக்கப்பட்ட காணி ஒதுக்கிலிருந்து விடுவிப்பதற்காக உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பிலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது கணக்காய்வுத் திகதியான 2025 டிசம்பர் 12 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, அக்காணிகளின் அடுத்தகட்ட நடவடிக்கைகளும் 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியாக தாமதமடைந்திருந்தன.*

*(எ) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட காணி ஒதுக்கிலிருந்து விடுவிப்பதற்காக 2021 மே 09 ஆம் திகதியன்று உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த, போதிலும் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 3912.33 ஏக்கர் காணிப் பரப்பளவிற்காக, கணக்காய்வுத் திகதியான 2025 டிசம்பர் 12 ஆம் திகதி வரையிலும் அக்குறித்த நீக்கம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 04 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியாக அவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.*

***4.1.3 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தைப் பெற்றுக் கொள்ளாமை***

(அ) விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ஆடுகள் வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே கட்டாயமாக காப்புறுதி செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், கோமரங்கடவல பிரதேச செயலகத்தினால் 2024 ஆகஸ்ட் 16 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட 15 ஆடுகளுக்கான காப்புறுதிப் பாதுகாப்பு 60 நாட்கள் தாமதத்தின் பின்னரே, அதாவது 2024 அக்டோபர் 15 ஆம் திகதியே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அதற்குப் பின்னர் இறந்துபோன ரூ. 75,975/- பெறுமதியுடைய 03 ஆடுகளுக்கான காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியதாது இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

(ஆ) 2025 ஆம் ஆண்டில் அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ், வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் கருகாமுனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நரியவெட்டுவான் விவசாய வீதியின் 02 வடிகான் அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 2,000,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இறுதி கொடுப்பனவுப் பட்டியலின் விபர உருப்படிகளின் இலக்கங்கள் 06, 07 மற்றும் 08 ஆகியவற்றின் கீழ் முறையே, அங்கீகரிக்கப்பட்ட கூழாங்கல் மண்ணை இட்டு வடிகானின் இருபுறமும் நிரப்புதல், JCB இயந்திரத்தைப் பயன்படுத்தி மண்ணைச் சமப்படுத்துதல் மற்றும் கரையின் இருபுறமும் புற்றரைகளை நாட்டுதல் ஆகிய வேலை விடயங்கள் போதுமான அளவிலும் உரிய தரத்துடனும் நிறைவேற்றபடாமை அவதானிக்கப்படவில்லை என்பதுடன், கணக்காய்வின் போது புற்கட்டிகள் எதுவும் காணப்படவும் இல்லை. எனவே, மேல்குறிப்பிட்ட விபர உருப்படிகளின் கீழ் செலவிடப்பட்ட ரூ. 156,498/- கொண்ட தொகையானது ஒரு பயனற்ற செலவீனம் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2021 ஆம் ஆண்டின் வீட்டுவசதி நிர்மாண முன்னேற்ற அறிக்கைகளுக்கு அமைய, சேருவில பிரதேச செயலகத்தின் ரூ. 600,000/- வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளும், ஒரு மில்லியன் ரூபாய் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 32 பயனாளிகளும் வீடுகளை முழுமையாக நிர்மாணித்து முடித்துள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது. ஆயினும், வீட்டுவசதித் திட்டத்தின் 44 பயனாளிகளுக்குரிய, மொத்தமாக ரூ. 2,308,000/- பெறுமதியான நிதி உதவிகள் இக்கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையிலும் சமுர்த்தி வங்கி கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக, அவர்களின் வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளமை தொடர்பான முன்னேற்றம் குறித்துச் சேருவில பிரதேச செயலகத்தினால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுடன் அவ்வீடுகளின் பௌதீக முன்னேற்றம் இணங்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

4.1.4 எதிர்பார்த்த பயன்கள் பெற்றுக்கொள்ளாமை

2024 ஆம் ஆண்டில் ரூ. 1,050,000/- கொண்ட அரசின் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ், வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் சேனையூர் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிச் கட்டிடம், 2025 அக்டோபர் 17 ஆம் திகதியான கணக்காய்வின் போதும் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியாகப் பயன்படுத்தப்படாமலிருந்ததன் காரணமாக, பயனற்ற நிலையில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

4.2 பெறுகைகள்

சேருவில பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இரண்டு கப் வாகனங்களுக்காக ரூ. 489,000/- செலவிடப்பட்டு 10 ரயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் ஒரு கப் வாகனத்திற்கான ரயர்களின் தரப்படுத்தப்பட்ட அளவு 255×15 ஆகும். ஆயினும், கொள்வனவு செய்யப்பட்டிருந்தவை

*235×75×15 அளவைக் கொண்ட ரயர்களாகும். இதற்கமைய, தரப்படுத்தப்பட்ட அளவை மாற்றி கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் அல்லது இயந்திரப் பொறியியலாளர் ஒருவரின் பரிந்துரைகள் எதுவும் பெற்றிருக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.*

*4.3 சொத்து முகாமைத்துவம்*

*(அ) 2019 யூன் 12 ஆம் திகதிய மாவட்ட செயலாளரின் கடிதத்திற்கு அமைய, திருகோணமலை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான T-75 இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த 05 வருட கால எல்லை கடந்துள்ளமையினாலும், அதனை மீண்டும் திருகோணமலை மாவட்ட செயலகத்திடம் ஒப்படைக்குமாறும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கூட்டுத்தாபனத் தலைவருக்கு முகவரியிட்டு, 2020 டிசம்பர் 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை உரகூட்டுத்தாபனத்தின் பதில் முகாமையாளர் உரிய உத்தியோகபூர்வ இல்லத்தை மேலும் தமது நிறுவனத்திற்கு வழங்குமாறு கோரிக்கையொன்றை விடுத்திருந்த போதிலும், அக்கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தை இலங்கை உரக்கூட்டுத்தாபனத்திற்கு வழங்க முடியாது எனத் தெரிவித்து 2021 ஜனவரி 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திருகோணமலை மேலதிக மாவட்ட செயலாளரினால் இலங்கை உர கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய உத்தியோகபூர்வ இல்லம் முறைப்படி பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன். மேலும், 2023 ஏப்ரல் வரையான காலப்பகுதி வரை இவ் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக ரூ. 127,840/- கொண்ட வாடகைப் பணமும் நிலுவையாகக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.*

*(ஆ) திருகோணமலை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான G-64 மற்றும் 19-A ஆகிய உத்தியோகபூர்வ இல்லங்கள் குடியிருப்பிற்குப் பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இவ் உத்தியோகபூர்வ இல்லங்களைப் பழுதுபார்ப்பதற்கென எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*(இ) கந்தளாய் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான, கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள தனி நபர் அரச வரிசை இல்லங்கள் மிகவும் பழமையானதாகவும் குடியிருப்பிற்குப் பொருத்தமற்ற நிலையிலும் காணப்படுவதனால், அவற்றை உடைத்து அகற்றுவதற்காகத் திருகோணமலை மாவட்டப் பொறியியலாளரின் பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளரின் 2022 மார்ச் 14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறியத்தரப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2024 அக்டோபர் 22 ஆம் திகதியிலும் அக்குறித்த கட்டிடத்தின் 07 இல்லங்களில் 05 இல்லங்களில் குடியிருந்தனர் என்பதுடன், அவ்வில்லங்களிலான குடியிருப்பு பாதுகாப்பற்றதாகக் காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது. உடைத்து அகற்றுவதற்கான பரிந்துரை கிடைக்கப் பெற்று 02 வருடங்களும் 07 மாதங்களும் கடந்திருந்த போதிலும், உரிய அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*(ஈ) பிரதேச செயலாளரின் 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் உட்பட 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் சேருவில பிரதேச செயலகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்டபோதிலும், 02 உத்தியோகபூர்வ இல்லங்களில் மாத்திரமே குடியிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டதுடன், குடியிருப்பிலுள்ள அவ்விரண்டு உத்தியோகபூர்வ இல்லங்களும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுவதனால், சொத்துக்களிலிருந்து சிறந்த பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாத மட்டத்தில் காணப்படுகின்றன. இதற்கமைய, பழைய பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம், சோமபுர சுற்றுலா விடுதி மற்றும் 42*

*வருடங்கள் கடந்த 05 பொது உத்தியோகபூர்வ இல்லங்கள் ஆகிய அனைத்தும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டன.*

*(உ) கிண்ணியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான குழும வாகனம் (Pool Vehicle), 2020 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2025 யூலை 18 ஆம் திகதி வரை ஏறத்தாழ ரூ. 1,500,000/- செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஜூலை 18 ஆம் திகதிக்குப் பின்னர் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு, திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தினுள் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.*

*4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்*

*(அ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதிய 13/2008(v) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2022 பெப்ரவரி 10 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைய, ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருள் எல்லை 165 லீற்றர் ஆகப் பின்பற்றப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், கிண்ணியா பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்டிருந்த கப் வாகனத்திற்காக 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 13 சந்தர்ப்பங்களில் 440 லீற்றர் எரிபொருள், 1202 ஆம் இலக்கச் செலவின விடயத் தலைப்பின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது. ஆயினும், அக்குறித்த எரிபொருளைப் பயன்படுத்தி அலுவலகக் கடமைகள் நிறைவேற்றப்பட்டமைக்கான பொது 268 படிவத்திற்கு அமைவான நாளாந்த ஓட்டப் பதிவுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.*

*(ஆ) மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுவசதித் திட்டத்தின் பயனாளியொருவருக்காக, 2019 நவம்பர் 06 ஆம் திகதியன்று வங்கியிலிருந்து விடுவிக்கப்பட்ட ரூ. 225,000/- கொண்ட தொகையில் ரூ. 75,000/- ஐ வெருகல் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தனக்குச் சொந்தமாக வைத்திருந்தார். பொலிஸ் முறைப்பாடொன்றின் பின்னர் அக்குறித்த பணம் இரண்டு சந்தர்ப்பங்களில் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 06 வருடங்கள் கடந்தும் இவ் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

*(இ) கந்தளாய் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான குழும வாகனத்தின் பௌதீகப் பரிசோதனைக்கு அமைய, 2025 டிசம்பர் 09 ஆம் திகதியன்று மைல்காட்டியின் வாசிப்பு 309,416 ஆகக் காணப்பட்ட போதிலும், ஓட்டப் பதிவுகளின் படி அதன் வாசிப்பு 308,734 ஆகக் காணப்பட்டது. இதற்கமைய, 682 கிலோமீற்றர் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அக் குழும வாகனம் ஒரு லீற்றருக்கு 08 கிலோமீற்றர் எரிபொருள் நுகர்வுத் திறனுடன் ஓடக்கூடியது என்பதால், வேறுபட்ட 682 கிலோமீற்றர் தூரத்திற்காக தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு அமைய ரூ. 23,614/- கொண்ட நிதி இழப்பொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

*4.5 நட்டங்களும் சேதங்களும்*

*(அ) 2025 ஆம் ஆண்டின் நிதி கூற்றில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல்கள் (இணைப்பு - I), பகுதி (i) இழப்புக்களை வசூலித்தல் கணக்கிலிருந்து நீக்குதல் / கைவிடுதல் விபரங்கள் போதிலும், மாவட்ட*

*செயலகத்திற்குச் சொந்தமான 2023 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதியன்று நிகழ்ந்த விபத்துக்குரிய, இதுவரை வசூலிக்கப்படாத ரூ. 2,124,270/- கொண்ட இழப்புத் தொகை காட்டப்பட்டிருந்தது.*

*(ஆ) 2023 ஜனவரி 08 ஆம் திகதியன்று விபத்துக்குள்ளான திருகோணமலை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான ஜீப் வாகனத்தை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்காக செலவிடப்பட்ட ரூ. 2,124,270/- கொண்ட இழப்பை, காப்புறுதி நிறுவனத்திடமிருந்து நட்டஈடாகப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனமையின் ஊடாக அரசாங்கத்திற்கு இழப்பொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், மரணமடைந்த ஓட்டுநரின் மரண விசாரணை அறிக்கையின் படியும், ஏற்பட்டிருந்த காயங்களின் தன்மையின் படியும் வெளிப்படுத்தப்படுவது யாதெனில், விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தைச் செலுத்தியவர் அக்குறித்த வாகனத்திற்குப் பொறுப்பாக இருந்த சாரதி அல்ல என்பதாகும்*

*(இ) மாவட்ட செயலகத்தின் தாபனப் பிரிவினால் வழங்கப்பட்ட விபரங்களின்படி, ரூ. 2,647,262/- பெறுமதியுடைய 05 வாகன விபத்துக்கள் தொடர்பான விபரங்கள், மேலும் வசூலிப்பதற்கோ, கணக்கிலிருந்து நீக்குவதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள நட்டங்கள் பற்றிய* ***நிதி கூற்றுகள்*** *சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், அவ்விபரங்கள் முறைப்படி சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.*

*(ஈ) கணக்கிலிருந்து நீக்குவதற்கான எவ்வித தீர்மானமும் எடுக்கப்பட்டிராத, வெருகல் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கப் வாகனத்தின், தற்போது தவணை முறையில் வசூலிக்கப்பட்டு வரும் ரூ. 130,920/- கொண்ட வாகன விபத்து இழப்புப் பெறுமதியானது, 2025 ஆம் ஆண்டின் நிதி நிதி நிலைமைக் கூற்றின் கணக்கிலிருந்து நீக்குதல் பற்றிய இணைப்பு (II) சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.*

*(உ) கிண்ணியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான குழும வாகனம் , 2020 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2025 யூலை 18 ஆம் திகதி வரை ஏறத்தாழ ரூ. 1,500,000/- செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், 2025 யூலை 18 ஆம் திகதிக்குப் பின்னர் இவ் வாகனம் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு, திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தினுள் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.*

*4.6 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்*

*(அ) தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.54 ஆம் பிரிவிற்கு இணங்க, உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அதேவேளை, வேறொரு பதவியில் பதில் கடமையாற்றுவாராயின் அவருக்கு அக்குறித்த பதில் கடமையாற்றும் பதவியின் ஆரம்பச் சம்பளத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4) மாத்திரமே உரித்தாக வேண்டும். அவ்வாறிருந்தும், வெருகல் பிரதேச செயலகத்தின் பதில் கணக்காளர் மற்றும் முன்னாள் பதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகிய உத்தியோகத்தர்களுக்கு 2023 பெப்ரவரி முதல் 2025 யூன் வரையான காலப்பகுதிக்குள் ரூ. 156,102/- கொண்ட தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

*(ஆ) தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவிற்கு இணங்க, உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அதேவேளை, வேறொரு பதவியில் பதில் கடமையாற்றுவாராயின், அக்குறித்த இரண்டு பதவிகளினதும் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில், அவரது நிரந்தரப் பதவிக்குரிய முழுச் சம்பளத்துடன் பதில் கடமையாற்றுப் பதவியின்*

*ஆரம்பச் சம்பளத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4) கொண்ட தொகையே அவருக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். அவ்வாறிருந்தும், நிறுவனக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவின் விதிகளுக்கு முரணாக, தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் பதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளருக்கு 2022 ஜூன் 07 முதல் 2025 மே 31 வரையான காலப்பகுதிக்குள் மொத்தமாக ரூ. 134,593/- கொண்ட தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்பத கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

***4.7 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்காமை***

*2026 ஜனவரி 07 ஆம் திகதியன்று EPCG/TR/A/DST/2025/AQ-21 ஆம் இலக்கத்தின் கீழ் "உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பான கணக்காய்வு - திருகோணமலை மாவட்ட செயலகம்" என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவுக்கு 2026 ஏப்ரல் 09 ஆம் திகதி வரை திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

***4.8 முகாமைத்தவ பலவீனங்கள்***

*(அ) நிதிப்பிரமாணத்தின் 390 ஆம் பிரிவிற்கு அமைய, காசோலைப் புத்தகங்கள் தினசரி பாதுகாப்பான முறையில் பூட்டுத்தொகுதியினுள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பெறுநரிடம் நேரடியாகக் கையளிக்கப்படாத அல்லது தபாலில் அனுப்பப்படாத காசோலைகளும் அவ்வாறே பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அவ்வாறிருந்தும், திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் ரூ. 20,162,134/- பெறுமதியுடைய 97 காசோலைகள், ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியாகப் பாதுகாப்பற்ற முறையில் கொடுப்பனவு உற்றுதிச்சீட்டுகளுடன் இணைத்து வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

*(ஆ) 07 வாகனங்கள் தொடர்பாக ரூ. 5,427,784/- பெறுமதியுடைய நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறித்து 1999 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 25 வருடங்கள் கடந்த நிலையிலும், வாகன விபத்துக்கள் சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகள் இது வரை முடிவிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.*

*(இ) சேருவில பிரதேச செயலகத்திற்குச் சொந்தமாகப் பிரதேச செயலாளருக்கான 02 அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்படுகின்ற போதிலும், அவற்றுள் ஒன்று 2018 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது சமூர்த்தி அலுவலகமாக நடாத்திச் செல்லப்படுகின்றது. மற்றைய உத்தியோகபூர்வ இல்லம் தற்போது பழுதடைந்த நிலையில் காணப்படுகின்ற போதிலும், அவ் இல்லத்தைப் பழுதுபார்த்துப் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய தாக உள்ள போதிலும், பிரதேச செயலாளர் அவ் உத்தியோகபூர்வ இல்லத்தில் கணக்காய்வின் போது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை*

*(ஈ) சேருவில பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான அட்டவணைப்படுத்தப்படாத ஏனைய 05 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சோமபுர சுற்றுலா விடுதி ஆகியவற்றின் காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை சேருவில பிரதேச செயலகத்திற்குரியதாகக் காணப்படவில்லை என்பதுடன், அக்குறித்த காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை பிரதேச செயலகத்திற்குப் கையளிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

*(உ) திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2015 செப்டம்பர் 08 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய, இப்பதவிக்காக 2015 செப்டம்பர் 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன், அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் PMAS/64473 ஆம் இலக்க மற்றும் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதிய சேவையை முடிவுக்குக் கொண்டுவரும் கடிதத்திற்கு அமைய அவரது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. இவ் உத்தியோகத்தர் தவறான பரீட்சைப் பெறுபேறுகளைச் சமர்ப்பித்து, 2015 செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 3,305,197/- ஐப் பெற்றிருந்தார். இதற்கு மேலதிகமாக, அவர் பெற்றிருந்த இடர் கடனின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிலுவை மீதி ரூபா 205,650/- ஆகக் காணப்பட்டதுடன், 2015 அக்டோபர் 14 ஆம் திகதி முதல் 2016 பெப்ரவரி 25 ஆம் திகதி வரை முழுச் சம்பளத்துடனான மகப்பேற்று விடுமுறையையும் , 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதி முதல் 2019 செப்டம்பர் 05 ஆம் திகதி வரை 10 நாட்கள் வெளிநாட்டு விடுமுறையையும் பெற்றிருந்தார். இது சம்பந்தமாக, அக்குறித்த உத்தியோகத்தர் மற்றும் உரிய காலப்பகுதியில் கல்வித் தகைமைகளின் உண்மைத்தன்மையை சரிபார்க்கத் தவறிய பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாவர்.*

*(ஊ) தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் கீழ் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் 2018 யூலை 09 ஆம் திகதி முதல் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், அவர் அரசாங்கச் சேவையில் ஈடுபட்டிருந்த போது பெற்றிருந்த இடர் கடன்களில் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை ரூ. 233,641/- ஆகக் காணப்பட்டது. 2025 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது 07 வருடங்கள் கடந்த நிலையிலும், இக்கடன் நிலுவை வசூலிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.*

***5. நிலைபேறான அபிவிருத்தி***

*நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் போதியளவிற்கு விழிப்புணர்வூட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் காணப்படாததன் காரணமாக, கணக்காய்வுக்குறிய வருடத்தில் அவ்விலக்குகளை பூர்த்தி செய்தமை குறித்தான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

***6. மனிதவள முகாமைத்துவம்***

***6.1 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை***

*கணக்காய்வுகுக்கரிய வருடம் முடிவடையும் போது, சிரேஷ்ட மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் பதவிகளில் 17 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் பதவிகளில் 23 வெற்றிடங்களும், இரண்டாம் நிலை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் பதவிகளில் 60 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் பதவிகளில் 46 வெற்றிடங்களுமாக மொத்தம் 146 பதவிக்குரிய வெற்றிடங்கள் காணப்பட்டன.*

*M.B. மதரசிங்க*
*பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி*
*கணக்காய்வாளர் நாயகம் சார்பாக*

## அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்

**மாவட்டசெயலகம், திருகோணமலை**
**செயல் திட்டம் 2022 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கான செயல்திறன்**

| இல | குறிப்பிட்ட காட்டி (மிகவும் முன்னுரிமை அளிக்கப்பட்ட பொதுச் சேவைகள்) | ஆண்டு எதிர்பார்க்கப்படும் வெளியீடு | ஒட்டு மொத்த முன்னேற்றம் | எதிர்பார்க்கப்படும்வெளியீட்டின் சதவீதமாக(%) உண்மையான வெளியீடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100% -90% | 89%- 75% | 75% - 50% | 50% - 35% |
| 1 | பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் பதிவு | 168,474.00 | 166,167.00 | √ | | | |
| 2 | தேசிய அடையாளஅட்டை வழங்குவதற்கான விண்ணப்பங்களைச் செயலாக்குதல் | 15,197.00 | 14,022.00 | √ | | | |
| 3 | நில அனுமதி மற்றும் அளிப்பு பத்திரங்களை வழங்குதல் | 2,264.00 | 949.00 | | | | √ |
| 4 | வருமான உரிதிப் பத்திரங்ளை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் | 81,621.00 | 80,695.00 | √ | | | |
| 5 | கர்ப்பிணி தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து முத்திரை வழங்குதல் | 35,965.00 | 36,487.00 | √ | | | |
| **ஒட்டுமொத்த செயல்திறன்** | | **303,521.00** | **298,320.00** | | | | |

**அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை.**

## 5.1 அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய நிலையான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| வ. எ ண் | முக்கிய துறை | முக்கிய செயல்பாடுகள் | நிலையான அபிவிருத்தி திட்டம் (SDG Goal) | | வெளியீடு / முக்கிய செயல்திறன் குறிகாட்டி | | முன்னேற்ற விகிதம் % | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG இலக்கு) | குறிக்கோள் / நோக்கம் | பயனாளிகளின் எண்ணிக்கை | அடைவு | 0-49 | 54-74 | 75-100 |
| *1* | கால்நடை | ஆடுகள் வழங்குதல் | *SDG 1 –* வறுமையின்மை *SDG 2 –* பசியின்மை | *1.2 2.3* | *50* | கிராமப்புற வறுமை குறைப்பு: வறுமைக் கோடு *25%* வீழ்ச்சி; விவசாயிகளின் வருமானம் மற்றும் சொத்துரிமை அதிகரிப்பு. | | √ | |
| *2* | மீன்பிடி | மீன் குஞ்சுகளை இருப்பு வைத்தல் | *SDG 2 –* பசியின்மை *SDG 14 –* நீருக்கடியில் வாழ்க்கை | *2.4 14.4* | *50* | மேம்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர்வாழ் வள மேலாண்மை. | | √ | |
| *3* | சுற்றுச்சூழல் | ஸ்ரீபுர குப்பை கிடங்கு மதில் சுவர், பேரிடர் தணிப்பு திட்டம், *RO* நீர் சுத்திகரிப்பு நிலையம் | *SDG 6 –* **தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்** *SDG 11 –* **நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்** *SDG 13 –* பருவநிலை நடவடிக்கை | *6.1 11.6 13.1* | *4,500* | நீர் பாதுகாப்பு: குடிநீர் தட்டுப்பாடு *25%* குறைப்பு. மீள்தன்மை: பேரிடர் தடுப்பு. | | √ | |
| *4* | வனம் மற்றும் வனவிலங்கு | பயிர் பாதுகாப்பிற்காக ஏர் கன் *(Air guns)* வழங்குதல் | *SDG 2 –* பசியின்மை *SDG 15 –* நிலப்பரப்பில் வாழ்க்கை | *2.4, 15.1* | *2,200* | வனவிலங்கு சகவாழ்வு: மோதல் பகுதிகளில் மனித-யானை மோதல்கள் *50%* நீக்கம். | √ | | |
| *5* | கைத்தொழில் | உற்பத்தி கிராமம், தோல் பை தயாரிப்பு, *SME* மேம்பாடு, பெண் தொழில்முனைவோர், இயந்திரங்கள் வழங்குதல் | *SDG 5 –* பாலின சமத்துவம் *SDG 8 –* கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி *SDG 9 -* தொழில்துறை, கண்டுபிடிப்பு மற்றும் உள்கட்டமைப்பு | *5.a 8.3 9.2* | *6,500* | பொருளாதார வளர்ச்சி: சுற்றுலாவில் *5%* அதிகரிப்பு; உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரம் பலப்படுத்தப்பட்டுள்ளது.. | | √ | |
| 6 | கல்வி | முன்பள்ளி கல்வி *(ECD),* பெற்றோர் பயிற்சி, ஆசிரியர் கொடுப்பனவு, பாடசாலை ஊட்டச்சத்து மற்றும் பழுதுபார்ப்பு | *SDG 4 –* **தரமான கல்வி** *SDG 1 –* வறுமையின்மை | *4.2, 4.c 1.4* | *10,000* | மனித மூலதனம்: எழுத்தறிவு விகிதம் *2%* அதிகரிப்பு (மாவட்டம் முழுவதும் *~95%).* | | √ | |
| *7* | சுகாதாரம் | கழிவுநீர் சுத்திகரிப்பு, ஊட்டச்சத்து ஆதரவு, சிறுநீரக குறைபாட்டிற்கான கொடுப்பனவு, போதைப்பொருள் தடுப்பு | *SDG 3 –* **நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு** *SDG 6 –* தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் | *3.4, 3.5 6.3* | *12,000* | ஆரோக்கியமான சமூகம்: குழந்தை இறப்பு விகிதம் *10%* குறைப்பு; ஊட்டச்சத்து அளவு *25%* உயர்வு. | | √ | |
| *8* | சமூக சேவை | அஸ்வெசும, ஊனமுற்றோர் மற்றும் முதியோர் கொடுப்பனவு, அமைதி திட்டங்கள் | *SDG 1 –* வறுமையின்மை *SDG 10 –* சமத்துவமின்மையை குறைத்தல் *SDG 16 –* **அமைதி,** | *1.3 10.2 16.1* | *8,000* | கிராமப்புற வறுமை குறைப்பு; சமூக பாதுகாப்பு வலைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்** | | | | | | |
| *9* | கலாச்சாரம் | கலாச்சார மைய கட்டுமானம், விகாரை மேம்பாடு, பள்ளிவாசல் புனரமைப்பு | *SDG 11 –* நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் | *11.4* | *2,500* | பாரம்பரிய பாதுகாப்பு மூலம் சுற்றுலா வளர்ச்சி *5%* அதிகரிப்பு. | | | |
| *10* | உள்ளூர் அரசாங்கம் | தெரு வியாபாரிகள் ஆதரவு, அலுவலக உபகரணங்கள், பேரிடர் பதில் நடவடிக்கை, டிஜிட்டல் மயமாக்கல், வேலை வாய்ப்பு முகாம்கள் | *SDG 8 –* **கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி** *SDG 16 –* அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | *8.5* *16.6* | *4,500* | வளத் திறன்: "பாதுகாப்பான பயன்பாடு" நெறிமுறைகள் மூலம் மின்சாரத் தேவை *1%* குறைப்பு. | | | |
| *11* | நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் | கழிப்பறைகள் மற்றும் குளியல் இடங்கள், வடிகால் அமைப்பு, நீர் இணைப்புகள் | *SDG 6 –* தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் *SDG 3 –* நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு | *6.1, 6.2* *3.9* | *500* | "தூய்மையான சமூகம்" பார்வை: மேம்பட்ட நோய் இல்லாத வாழ்க்கை; கிராம மட்டத்தில் தூய்மையான தேசத்தை உருவாக்குதல். | | √ | |
| *12* | வீடமைப்பு | மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கான வீடுகள் | *SDG 1 –* **வறுமையின்மை** *SDG 11 –* நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் | *1.4* *11.1* | *535* | அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல்; வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். | | √ | |
| *13* | சாலை மற்றும் போக்குவரத்து | சாலைகள், வடிகால்கள், பாலங்கள் கட்டுமானம் | *SDG 9 –* **தொழில்துறை, கண்டுபிடிப்பு மற்றும் உள்கட்டமைப்பு** *SDG 11 –* நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் | *9.1, 11.2* | *5,000* | நிலையான உள்கட்டமைப்பு: அடிப்படைத் தேவைகள் பூர்த்தி மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்கான இணைப்பு மேம்பாடு. | | √ | |

### 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சவால்கள்

கடந்த சில தசாப்தங்களில் நீண்ட கால யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்ட்ட மாவட்டங்களில் திருகோணமலை மாவட்டமும் ஒன்றாகும். சிவில் நிர்வாகம் மற்றும் சமூகவாழ்க்கையை மீட்டெடுப்பததால் தற்போது வளர்ந்து வரும் மாவட்டங்களில் ஒன்றாக திருகோணமலை மாவட்டம் விளங்குகின்றது. .

ஏறக்குறைய அனைத்து 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளும் இந்த மாவட்டத்திற்கு ஒரு சவாலாக இருந்தாலும் மாவட்டத்திற்கான மாவட்ட முன்னுரிமைகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 5 ஆண்டு மூலோபாய மேம்பாட்டு திட்டத்தை நாங்கள் ஏற்கனவே தயார் செய்துள்ளோம் .

மேற்கண்ட 4.1 ல் விளக்கட்டுள்ள கடந்த ஆண்டு திட்டமிடப்பட்ட பல இலக்ககளை நாங்கள் அமைந்துள்ளோம். இன்னும் மாவட்ட இலக்ககளை அடைவதற்கு நாம் இன்னும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் அமைதி பொருளாதாரத்தில் நிலவும் நிலையற்ற அமைதிமற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் இயற்கை இடையூறுகள் காரணமாக இந்த திட்டம் முழுவதுமாக செயற்படாமல் போகலாம். எனவே முடிவுகளும் தாமதமாகும்.

## அத்தியாயம் 06 – மனிதவள விபரம்

### 6.1 ஆளணி வெற்றிடம்

| | அங்கீகரிக்கப்பட்டது | தற்போதுள்ளது | வெற்றிடங்கள் / மேலதிகம் |
|---|---|---|---|
| சிரேஸ்ட | 59 | 41 | 18 |
| மூன்றாம்நிலை | 40 | 17 | 23 |
| இரண்டாம நிலை | 1,022 | 962 | 60 |
| ஆரம்ப நிலை | 145 | 99 | 46 |
| மொத்தம் | **1,266** | **1,119** | **147** |

### 6.2 **நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் வீதம்.

திருகோணமலை மாவட்டத்தில் மனிதவளத்தில் ஒட்டுமொத்த நிலையானது 147 அதிகாரிகளுக்கும் குறைவாக காணப்பட்டுள்ளமை ஊழியர்களின் பற்றாக்குறையை குறிக்கின்றது. இது பல ஆண்டுகளாக தொடர்ந்து இருப்பினும் கடந்த இரண்டு ஆண்டுகளில் இது ஓரளவு பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் பொது மக்களுக்கு சேவை செய்வதில் சிரேஸ்ட மற்றும் மூன்றாம் தர அரச அதிகாரிகளின் பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட 99 பணியாளர்களுக்கு விகிதாசாரப்படி சிரேஸ் மற்றும் மூன்றாம் தர அதிகாரிகளில் 58 மற்றும் 41 அதிகாரிகள் மட்டுமே பணியாற்றுகின்றனர். இது மாவட்டத்தின் வளர்ச்சியிலும் நிர்வாகம் மற்றும் முகாமையிலும இன்று வரை நேரடியான தாக்கங்களை செலுத்தியுள்ளது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

| பயிற்சிப்பட்டறை | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்ட காலம் | மொத்த முதலீடு (ரூபா.) | | திட்டத்தின் இயல்பு | வெளியீடு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்ளூர் | வெளியூர் | | |
| ஆரம்ப மட்ட உத்தியோகத்தர் களுக்கான பயிற்சிப்பட்டறை | 102 | 12hrs | 142,592.89 | | உள்ளூர் | நியமனத்திற்கான அடிப்படைகள் மற்றும் விடுமுறைகள் |
| | | | | | | அரச உத்தியோகத்தர்களின் பொது தொடர்பு மற்றும் ஒழுக்காற்று, வினைத்திறனான தொடர்பாடல் திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை |
| | | | | | | மனித வள திறன் மற்றும் சமூக தொடர்பாடல். |
| | | | | | | முகாமை மற்றும் அலுவலக முறைமை |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கான பயிற்சிப்பட்டறை | 62 | 12hrs | 179,454.00 | | உள்ளூர் | ஒழுக்காற்று மற்றும் விசாரனை நடைமுறைகள் |
| | | | | | | |

**பயிற்சித்திட்டம் நிறுவனத்தின் செயற்திட்டத்திற்கு எவ்வாறு பங்களித்தது என்பதை சுருக்கமாக கூறுங்கள்**

மாவட்ட செயலகத்தில் தற்போதுள்ள மற்றும் புதிய ஊழியர்களின் அறிவு திறன்கள் மற்றும் அணுகு முறைகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தில் திறன் மேம்பாட்டு பிரிவு நிறுவப்பட்டுள்ளது.மேலும் 11 பிரதேச செயலகங்களும் உள்ளன. இது குறுகிய மற்றும் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கு திட்டமிடப்பட்ட ஆரம்ப பயிற்சிகளை வழங்குகின்றது. இன்று மாவட்டத்தில் பொது சேவை நடவடிக்கைகளை நடாத்த வேண்டியது அவசியம்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிற துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும் கிழக்கு மாகாண சபையின் பல துறைகளில் உள்ளோரும் இந்த பயிற்சிகளில் கலந்து கொள்ள ஊக்குவிக்கப் படுகின்றார்கள்.

பல பொதுசேவை வழங்கல் முறைகள் தற்போது தொழில்நுட்பத்துடன் பொருத்தப்படுவதால் ஒவ்வொரு பணியாளரும் அடிப்படை கணணி அறிவு விழிப்புடன் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இப்பிரிவு மொழித்திறனுக்கான பயிற்சியையும் நிதிஒழுங்கு முறைகள் ஸ்தாபனக் குறியீடுகள் மற்றும் வேலை தொடர்பான வி'யங்கள் பற்றிய அறிவையும் வழங்குகின்றது. அந்த பயிற்சிகள் அனைத்தும் பொது சேவை அலுவலரின் பணியாளர்களின் செயற்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது.

## அத்தியாயம் 07– இணக்க அறிக்கை

| ழே. | பொருந்தக்கூடிய தேவை | இணக்கநிலை இணங்கினார் /இணங்கவில்லை | இணங்காததற்கு சுருக்கமான விளக்கம் | ஏதிர்காலத்தில்இணங்குவதைதவிர்க்கப்பட்ட முன்மொழியப்பட்ட சரியான நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1. | **பின்வரும் கணக்கறிக்கைகள் /கணக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** | | | |
| 1.1. | வருடாந்த கணக்கறிக்கை | இணங்கினார் | | |
| 1.2. | அரச ஊழியர்முற்பணக்கணக்கு | இணங்கினார் | | |
| 1.3. | உற்பத்தி மற்றும் வர்த்தகம் கணக்கில் முன்கூட்டி வைப்பிலிடல் | இணங்கவில்லை | | |
| 1.4. | களஞ்சிய முற்பணக்கணக்கு | இணங்கவில்லை | | |
| 1.5. | விசேடமுற்பணக்கணக்கு | இணங்கவில்லை | | |
| 1.6. | ஏனையவை | இணங்கவில்லை | | |
| 02. | **புத்தகங்கள் பதிவேடுகள் பேணுதல் (FR445)/** | | | |
| 2.1. | நிலையான சொத்துக்களுக்கான பதிவேடுகள் பேணப்பட்டது பொதுவிதிமுறைகளை புதுப்பித்தல். நிர்வாகச்சுற்றறிக்கை 267/2018 | இணங்கினார் | | |
| 2.2. | தனிப்பட்ட சம்பளப்பதிவேடு தனிப்பட்ட சம்பள அட்டைகள் பேணலும் புதுப்பித்தலும் | இணங்கினார் | | |
| 2.3. | கணக்காய்வு அறிக்கை பதிவேடு பேணலும் புதுப்பித்தலும் இற்றைப்படுத்தலும் | இணங்கினார் | | |
| 2.4. | உள்ளககணக்காய்வு அறிக்கை பதிவேடு பேணலும் புதுப்பித்தலும் இற்றைப்படுத்தலும | இணங்கினார் | | |
| 2.5. | அனைத்து மாதாந்த கணக்குச்சுருக்கங்களும் சரிபார்ககப்பட்டு உரிய தேதியில் திறைசேறிக்கு சமர்ப்பித்தல் | இணங்கினார் | | |
| 2.6. | காசோலைகள் பதிவு மற்றும் பண ஆர்டர்களுக்கான பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. | இணங்கினார் | | |
| 2.7. | உள்ளக இருப்பு பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது | இணங்கினார் | | |
| 2.8. | இருப்பு பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது | | | |
| 2.9. | நுட்டத்திற்கான பதிவேடு | இணங்கினார் | | |
| 2.10. | அர்ப்பணிப்புக்களுக்கான பதிவேடு | இணங்கினார் | | |
| 2.11. | காசோலை அடியிதழ்களின் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது | இணங்கினார் | | |
| 03. | **நிதிக்கட்டுப்பாடுகளுக்கான செயற்பாடுகளை ஒப்படைத்தல் (FR 135)** | இணங்கினார் | | |
| 3.1. | நிறுவனத்திற்குள் நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| 3.2. | நிதி அதிகாரப்பிரதிநிதித்துவம் பற்றி நிறுவனத்திற்குள் தொடர்பாடலை மேற்கொள்ளல் | இணங்கினார் | | |
| 3.3. | இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கிடையில் பணப்பரிமாற்றம் அதிகாரபிரதிநிதித்துவம் அடிப்படையில் அமையும் | இணங்கினார் | | |
| 3.4. | 11.05.2014ம் திகதிய 171/204 அமைவாக கணக்காளர்களால் கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டன. இதற்காக ஊதிய மென்பொருள் தொகுப்பு பயன்படுத்தப்பட்டது | இணங்கினார் | | |
| 04. | **வருடாந்த திட்டமிடல் தயாரிப்பு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.1. | வருடாந்த செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| 4.2. | வருடாந்த பெறுகைக்குழுத்திட்டம் தயாரிக்கப்ட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 4.3. | வருடாந்த உள்ளக கணக்காய்வுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| 4.4. | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய தேதியில் டேனு க்கு சமர்ரப்பிக்கப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| **4.5.** | வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்று திறைசேறிக்கு சமர்ப்பிக்கப்ட்டுள்ளது | இணங்கினார் | | |
| **5.** | முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வாளர்களின்ால் வழங்கப்பட்ட ஐயவினாப்பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யயப்பட்டள்ளது | இணங்கினார் | | |
| 5.1. | அனைத்து ஐயவினாக்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் கணக்காய்வாளருக்கு பதில்கள் வழங்கப்பட்டது | இணங்கினார் | | |
| **06.** | **உள்ளக கணக்காய்வு** | இணங்கினார் | | |
| 6.1. | நிதிஒழுங்குமுறை134(2)) DMA/1-2019 அமைய உள்ளக கணக்காய்வாளரை கலந்தாலோசித்த பின்னர் ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வு தயாரிக்கப்பட்டது | இணங்கினார் | | |
| 6.2. | அனைத்து ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| 6.3 | அனைத்து ஐய வினா நகல்களும் 2018 ம் ஆண்டின் 19 ம் இலக்க கேசிய ஐயவினாச்சட்டத்தின் துணைப்பிரிவு 40(4)ன் படி முகாமைத்துவகணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 6.4. | ஐயவினாஅனைத்தினதும் நகல்கள் நிதி ஒழுங்குமுறை 134(3) ன் அடிப்படையில் உள்ளன கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| **07.** | **உள்ளக கணக்காய்வு முகாமைத்துவ குழு** | இணங்கினார் | | |
| 7.1. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் குறைந்த பட்ச 4 கூட்டங்கள் டி.எம.ஏ சுற்றறிக்கையின் 1/2019ன் படி ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| **08.** | **சொத்து முகாமைத்துவம்** | இணங்கினார் | | |
| 8.1. | சொத்து மேலாண்மை சுற்றறிக்கை எண் 01/2017 ன் 7 ம் பந்தியின் படி சொத்துக்கள் மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கமரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கினார் | | |
| 8.2. | சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கு ஒரு பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டார். மேலும் பரிந்துரைக்ககப்பட்ட அதிகாரியின் விபரங்கள் மேற்கூறிய சுற்றறிக்கையின் 13 ம் பந்தியின் படி கம்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டள்ளது் | இணங்கினார் | | |
| 8.3. | அலுவலக கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது பொது நிர்வாகசுற்றுநிருபம் 01/2020 ன் பிரகாரம்குறித்த திகதியின் அடிப்படையில் கணக்காள்வாளர் தலைமைஅதிபதியிடம் குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன | இணங்கினார் | | |
| 8.4. | கணக்கெடுப்பு குழு மற்றும் பிறதொடர்புடைய பரிந்துரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறைகள் | இணங்கினார் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகள் சுற்றறிக்கையில் குறிப்பிட்படப்டுள்ள காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | | |
| 8.5. | நிதிப்பிரமாணம் 772 ன் படி கண்டன கட்டுரைகளை அக்றவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது | இணங்கினார் | | |
| **09.** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1. | பூல்வாகனங்கள் தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் மற்றும் மாதாந்த சுருக்கங்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய தேதியில் சமர்ப்பிக்கப்பட்டது | இணங்கினார் | | |
| 9.2. | கண்டனம் செய்யப்பட்ட வாகனங்கள் கண்டனம் செய்யப்பட்ட 6 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்பட்டன. | இணங்கினார் | | |
| 9.3. | வாகனபதிவு புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது | இணங்கினார் | | |
| 9.4. | ஓவ்வொரு வாகன விபத்துக்களும் நிதிப்பிரமாணம் 103,104,109,மற்றும் 110ற் அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | இணங்கினார் | | |
| 9.5. | பொதுநிருவாகச்சுற்ற்றிக்கை எண் 30/2016 29.12.2016 திகதிய 3.1 ன் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீண்டும் சோதனை செய்யப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 9.6 | குத்தகை வாகனப்பதிவுப்புத்தகங்களின் முழுமையான உரிமை குத்தகை காலத்திற்கும் பிறகு மாற்றப்பட்டுள்ளது. | இணங்கவில்லை | | |
| **10.** | **வங்கிக்கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10. | வுங்கிக்கணக்கிணக்ககூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டது மற்றும் உரிய தேதிக்குள் கணக்காய்வு தயார் செய்யப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 10.2. | மதிப்பாய்வு செய்யப்பட்ட அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து இருந்த அல்லது முந்தைய ஆண்டுகளிலிருந்து கால வரைக்கணக்ககள். | இணங்கினார் | | |
| 10.3. | குறிப்பிட்ட கால இடைவெளியில் வங்கிகணக்கிணக்க அறிக்கைகள்மூலம் வெளிப்படுத்தப்பட்டநிலுவைகள் மற்றும் அதற்கான மாற்றங்கள் செய்யப்படவேண்டியது தொடர்பான நிதி விதிமுறைகள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..மேலும் அந்த நிலுவைகளை ஒரு மாத கால கணக்குக்குள் தீர்த்து வைத்தல் | இணங்கினார் | | |
| **11.** | **ஏற்பாடுகளின் பயன்பாடு** | இணங்கினார் | | |
| 11.1 | ஒதுக்கப்பட்ட விதிகளின் வரம்பை மீறாமல் செலவிடப்பட்டன | இணங்கினார் | | |
| 11.2. | நிதிப்பிரமாணம் 94(1) இன்படி ஆண்டு இறுதியில் இருந்த விதிமுறைகளை மீறாத கடன்கள் | இணங்கினார் | | |
| **12.** | **அரசஅலுவலர்களின் கணக்கில் முன்னேற்றம்** | இணங்கினார் | | |
| 12.1. | வுரம்புகள் இணங்கின | இணங்கினார் | | |
| 12.2. | நிலுவைத்தொகையில் கடன்கள் குறித்து நேர பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது | இணங்கினார் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.3. | ஒரு வருடத்திற்குமேலான நிலுவைத்தொகை தீர்க்கப்பட்டது | இணங்கினார் | | |
| **13.** | **பொது வைப்புக்கணக்கு** | இணங்கினார் | | |
| 13.1. | இழந்த வைப்புத்தெகை அகற்றுவது தொடர்பாக குசு.571இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 13.2. | பொது வைப்புக்கணக்கான கட்டுப்பாட்டுக்கணக்கு புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது. | இணங்கினார் | | |
| **14.** | **கட்டுநிதிக்கணக்கு** | இணங்கினார் | | |
| 14.1. | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் பணப்புத்தகத்திலுள்ள தொகை வுழுனு க்கு அனுப்பப்பட்டது | இணங்கினார் | | |
| 14.2. | நிபி371 ன் படி வழங்கப்பட்ட தற்காலிக துணை கட்டுநிதிப்பணிகள் முடிந்த ஒருமாதத்திற்குள் குடியேறின | இணங்கினார் | | |
| 14.3. | நிபி371 ன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறிதற்காலிக துணை கட்டுநிதி வழங்கப்படவில்லை | இணங்கினார் | | |
| 14.4. | குட்டுநிதி கணக்ககள் இருப்பு மாதந்தோறும் திறைசேறிப்புத்தகத்துடன் சமரசம் செய்யப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| **15.** | **வருமானகணக்கு** | இணங்கினார் | | |
| 15.1. | வருவாயிலிருந்து பணத்தை திரும்பிப்பெறுதல் விதிமுறைகளின் அடிப்படையில் செய்யப்பட்டது. | இணங்கினார் | | |
| 15.2. | வருவாய் வசூல் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருவாய்க்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது | இணங்கினார் | | |
| 15.3. | நிபி 176 இன் அடிப்படையில் நிலுவைத்தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்புகின்றது | இணங்கினார் | | |
| **16.** | **மனிதவள முகாமைத்துவம்** | இணங்கினார் | | |
| 16.1. | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கு ஊழியர்கணக்கு ஊதியம் வழங்கப்பட்டது | இணங்கினார் | | |
| 16.2. | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து பூர்வமாக கடமைப்பட்டியல் வழங்கப்பட்டது. | இணங்கினார் | | |
| 16.3. | அனைத்து அறிக்கைகளும் 20.09.2017 திகதியிடப்பட்ட அவர்களின் சுற்றறிக்கை எண் 04.:.2013 இன் அடிப்படையில் ஆளுனு சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கினார் | | |
| **17.** | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | இணங்கினார் | | |
| 17.1. | ஒரு தகவல் அதிகாரி நியமிக்கப்பட்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் மற்றும் ஒழுங்கமுறை ஆகியவற்றின் அடிப்படையில் சரியான தகவல்களின் பதிவு தயாரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகின்றது | இணங்கினார் | | |
| 17.2. | இந்த நிறுவனம் பற்றிய தகவலானது பொதுமக்களுக்கு தகவல் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.மேலும் இந்த வலைத்தளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் பொது அதிகாரத்திற்கு எதிராக பொது மக்களுக்கு குற்றச்சாட்டு தெரிவிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 17.3. | தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 10 ன் படி இரு ஆண்டு மற்றும் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கினார் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | குடிமக்கள் சாசானத்தை செயற்படுத்துதல | இணங்கினார் | | |
| 18.1 | ஒரு குடி மக்கள் சாசனம் குடிமக்கள் வாடிக்கையாளனின் சாசனம் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வட்ட எண05/2008(1)ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ன் படிகுடிமக்கள் சாசானம் குடிமக்கள் வாடிக்கையாளனின் சாசனத்தை உருவாக்குதல் செயற்படுத்தல் ஆகியவற்றைக்கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஒரு முறையான நிறுவனம் உருவாகியுள்ளது. | இணங்கினார் | | |
| **19.** | **மனித வள திட்டமிடலை தயாரித்தல்.** | இணங்கினார் | | |
| 19.1. | 24.01.2018 திகதியிடப்பட்ட பொதுநிருவாகசுற்றறிக்கை எண 02/2018 இன் இணைப்பு 02 இஇல் உள்ள வடிவத்தின் அடிப்படையில் ஒரு மனித வள்த்திட்டமிடல் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணங்கினார் | | |
| 19.2. | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டுக்க 12 மணி நேரத்திற்கும் குறையாத குறைந்த பட்ச பயிற்சி வாய்ப்பு மேற்கூறிய மனித வளத்திட்டத்தில் உறுதி செய்யப்பட்டள்ளது. | இணங்கினார் | | |
| 19.3. | மேற்கூறிய சுற்றறிக்கையின் இணைப்பு01 இல் உள்ள வடிவமைப்பின் அடிப்படையில் முழு ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. | இணங்கினார் | | |
| 19.4. | ஒரு முதல்நிலை அதிகாரி நியமிக்கப்ட்டு மனித வளமேம்பாட்டுத்திட்டத்தை தயாரித்தல். திறன்மேம்பாட்டுத்திட்டங்களை ஒழுங்கு படுத்துதல் மற்றும் மேற்கண்ட சுற்றறிக்கையின் எண் 6.5 இன் படி திறன்மேம்பாட்டு திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றின் பொறுப்பை நியமித்தார். | இணங்கினார் | | |
| **20.** | **பதில்கள் தணிக்கை** | இணங்கினார் | | |
| 20.1. | முன்னைய அண்டுகளில் கணக்காய்வாளர் வழங்கிய தணிக்கை பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. | இணங்கினார் | | |